**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
***ஒ.எஸ்.2/2021***
**2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ம் நாள் சனிக்கிழமை**

**வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண். 44வது பிரிவு 6(1)ன்படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.எஸ்.செல்லபாண்டியன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: செபஸ்தியம்மாள்** | **சாதி** | **:** |
| **த-பெ** | **:** | **சமயம்** | **:** |
| **கிராமம்** | **:** | **தொழில்** | **:** |
| **வட்டம்** | **:** | **வயது** | **:** |

**வா.சா.1 செபஸ்தியம்மாள் ஆஜர்.**

**3, 4, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் உசிலைக்கண்மாயில் வசித்து வருகிறேன். எனக்கு எழுத, படிக்க தெரியாது. வழக்கு விவரங்களை நான் தான் சொன்னேன். வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியும். என் தகப்பனார் சாமிநாதன் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. ரொம்ப வருடமாகிவிட்டது. சாமிநாதனின் தகப்பனார் பெயர் சவரிமுத்து என்றால் சரிதான். சவரிமுத்துவுக்கு என் தகப்பனார் சாமிநாதன், ஆரோக்கியம், குழந்தைச்சாமி, ஞானரத்தினம், லூர்து, ராசாமணி ஆகியோர்கள் மக்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. சாமிநாதனின் உடன்பிறந்த சகோதரி, சகோதரர்கள் இந்த வழக்கில் ஏன் சேர்க்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாயார் பெயர் அருளம்மாள். அருளம்மாள் தற்போது உயிருடன் இல்லை. இறந்த விவரம் எனக்கு தெரியாது. என் உடன்பிறந்தவர்கள் செல்வநாயகம்மாள், 1ம் பிரதிவாதி பார்வர்ம்மாள், அந்தோணிசாமி, வேதமாணிக்கம், வாதி ஆகியோர்கள் என்றால் சரிதான். செல்வநாயகம்மாள் என் மூத்த சகோதரி ஆவார். மேற்படியார் 50 வருடத்திற்கு முன்பே காலமாகிவிட்டார் என்றால் சரிதான். செல்வநாயகம்மாளின் கணவர் மரியநாயகமும் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். செல்வநாயகம்மாளுக்கு வேதநாயகம், ஜான்போஸ்கோ, 2ம் பிரதிவாதி ஜெபமாலை, ஜேம்ஸ் ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான். ஜான்போஸ்கோ இறந்துவிட்டார். ஜான்போஸ்கோவின் மனைவி ஜெனிபர் (எ) பாக்கியம்

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெனிபர் (எ) பாக்கியத்திற்கு ஒரு ஆண் மகனும், பெண் மகளும் உள்ளார் என்ற விவரம் தெரியும் என்றும் இந்த வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி ஜெபமாலையின் உடன்பிறந்தவர்களை இவ்வழக்கில் ஏன் சேர்க்கவில்லையென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குடன் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 ஆன வம்சாவழி பட்டியல் தவறு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

(3, 4, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

Taken down by me in open court
readover/interpreted to the witness
in Tamil and acknowledged by
him/her to be correct.

District Munsif,
Manamadurai.